# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 21: வனாந்தரத்தில் சத்தம்

**மத்தேயு 3:1-12**

### நடந்த கதை . . .

இயேசு, 'ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை' என்று சொன்னார். மத்தேயு 11:11. மகா தீர்க்கதரிசி என்று இயேசு சொன்ன இந்த மனிதனைப்பற்றி என்ன தெரியும்?

யூதேயாவின் வனாந்தரங்களில் யோவான் பிரசங்கித்ததைக் கேட்க பல மைல்கள் சுற்றிலுமிருந்து மக்கள் வந்தார்கள். அன்றைய மதத்தலைவர்கள் ஆடம்பரமாக வாழ்ந்தார்கள்; யோவான் எளிய ஒரு வாழ்க்கை வாழ்ந்தார். ஆசாரியர்கள் ஆடம்பர உடை அணிந்தார்கள்; யோவான் ஒட்டகமயிர் உடை தரித்து, வார்க்கச்சை கட்டியிருந்தார். அவர்கள் விருந்துண்டு மகிழ்ந்தார்கள்; யோவான் உபவாசமிருந்தார்; வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் உண்டார். தேவ ஆவியால் நிரப்பப்படும்படி திராட்சரசமும் மதுவும் குடியாதிருந்தார். லூக்கா 1:15. அலங்காரமிக்க ஜெபஆலயங்களில் அல்ல, ஆற்றோரங்களிலும் கற்பாறைகள் நிறைந்த பள்ளத்தாக்குகளிலும் வைத்துப் பிரசங்கம்செய்தார். 'இவர் எலியாவாக இருக்குமோ?' எனும் கேள்வி சிலருக்கு எழும்பியது.



அந்தப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி போலவே யோவான் உடையணிந்திருந்தார்; ஆனால் அவர் எலியாவின் மறு பிறவி அல்ல. யோவான் பிறப்பதற்குமுன்பு காபிரியேல் தூதன் அவர் பெற்றோரிடம், 'அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய்' தேவனுக்குமுன்னே நடப்பான் என்று சொன்னார். லூக்கா 1:17.

தேவமக்கள்மத்தியில் எழுப்புதல் உண்டாக்க, 'எலியாவுக்கு இருந்த பரிசுத்த ஆவியின் அதே வல்லமை யோவானுக்கும் இருந்தது; அதுதான் அவர் ஊழியத்தின் ஓர் முக்கிய அம்சம். மனந்திரும்புதல்குறித்துப் பிரசங்கிப்பதும், இயேசுவின் முதலாம் வருகைக்காக மக்களை ஆயத்தம்செய்வதும் யோவானின் விசேஷப் பணியாயிருந்தது.

இயேசுவின் இரண்டாம் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்தும் பணியைச் செய்ய கடைசி நாட்களில் எலியாக்களும் யோவான் ஸ்நானன்களும் அணியணியாக எழும்புவார்களென வேதாகமம் கூறுகிறது. 'இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புவேன்.' மல்கியா 4:5. (யோவேல் 2:28-31 ஐ வாசிக்கவும்).

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

## 1. யோவானுடைய வாழ்க்கை ஆவியில் நிறைந்ததாகக் காணப்பட்டதற்கு முக்கியமான ஒரு காரணம் என்ன?

**லூக்கா 3:16.** *யோவான் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் ____________________ ____________ ... என்றான்.*

**யோவான் 3:30.** *அவர் பெருகவும் நான் ____________________ வேண்டும்.*

**குறிப்பு:** ஆவியால் நிறைந்த யோவான் ஸ்நானனின் வாழ்க்கையில் விசேஷமாக மனத்தாழ்மை காணப்பட்டது. யோவானின் வல்லமையான ஊழியத்திற்குக் காரணமே அவர் தன்னை ஆண்டவருக்கு முழுமையாக அர்ப்பணித்திருந்ததுதான். தன்னை அல்ல, இயேசுவை மற்றவர்களுக்குக் காட்டுவதில் அவர் சொல்லொண்ணா மகிழ்ச்சியடைந்தார். அவர் செய்த ஒவ்வொன்றும் தேவனுடைய நாமத்திற்கு மகிமையைக் கொண்டுவருபவையாகவே இருந்தன.

## 2. யோவான் ஸ்நானன் வேத வாக்கியங்களை வாசித்தாரா?

**யோவான் 1:23.** *அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வைபண்ணுங்கள் என்று ஏசாயா ______________________ சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய __________________________ என்றான்.*

**குறிப்பு:** ஆம்! பழைய ஏற்பாட்டில் தன்னைபற்றிச் சொல்லப்பட்டிருப்பதாக யோவான் சுட்டிக்காட்டினார்; எனவே வேதவாக்கியங்கள்பற்றி ஆழமான அறிவு அவருக்கு இருந்தது. எப்போதும் உபவாசமிருந்து ஜெபிக்க அவர் தன் சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். மத்தேயு 9:14. ஆண்டவர் மேல் அவர் ஆழமான அன்பு வைத்திருந்ததற்கு இது மற்றொரு சாட்சி. அதுபோல, நம்முடைய தனிப்பட்ட தியானங்களாலும் வேத ஆராய்ச்சியாலும் நாம் தேவனை அறியலாம், அவரில் அன்புகூரலாம், ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளலாம்.

## 3. இயேசுவுக்குச் சாட்சியாக இருக்க யோவான் ஸ்நானன் விரும்பினாரா?

**யோவான் 1:29.** *மறுநாளிலே __________________ இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு; ______________, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி ... என்றான்.*

**குறிப்பு:** தனிமையில் வாழ்ந்தவர் யோவான். லூக்கா 1:80. இயேசுவை உலகத்தின் இரட்சகரென மக்களுக்கு எடுத்துக்காட்டுவதில் அவமானத்தைச் சகிக்கவும், தன் உயிரைவிடவும்கூட அவர் ஆயத்தமாக இருந்தார். அதுபோல இன்றும், ஆண்டவரை உண்மையாகவே நேசிக்கிறவர்கள் இயேசுவுக்காகச் சாட்சிபகரும் விதத்தில் பயப்படாமல் இருப்பார்கள்.

## 4. ஒளிவுமறைவின்றி யோவான் பிரசங்கித்தது மதத்தலைவர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் பிடித்திருந்ததா?

**லூக்கா 7:30.** *பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் ______________________________.*

**லூக்கா 3:19,20.** *காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது ... தான் செய்த மற்றப் பொல்லாங்குகளினிமித்தமாகவும், யோவானாலே ______________________போது, ... யோவானையும் __________________ அடைத்துவைத்தான்.*

**குறிப்பு:** அன்று பிரபலமாகக் காணப்பட்ட பாவங்களை மதத்தலைவர்களும் செய்துவந்தார்கள்; அவர்களை யோவான் துணிவுடன் கடிந்துகொண்டார். மனந்திரும்புதலையும் பரிசுத்தத்தையும் பற்றிய தேவனுடைய கடைசிக்காலச் செய்தியும்கூட முக்கிய அரசியல் தலைவர்களுக்கும் சபைத்தலைவர்களுக்கும் பிடிக்காது; ஆனால் அது வேதாகமத்தின் செய்தி.

## 5. நகை அணிவதையும், ஆடம்பர உடை அணிவதையும் வேதாகமம் ஆதரிக்கவில்லையா?

**1தீமோத்தேயு 2:9,10.** *ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, ______________________, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், … ____________________ வஸ்திரத்தினாலும் … தங்களை அலங்கரிக்கவேண்டும்.*

**1பேதுரு 3:3,4.** *மயிரைப் பின்னி, பொன்னா____________________ அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய ________________ அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமா____________________ … அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.*

**ஏசாயா 3:18–23.** *அந்நாளிலே ஆண்டவர் அவர்களுடைய ____________________ சிலம்புகளையும், சுட்டிகளையும், பிறைச்சிந்தாக்குகளையும், ஆரங்களையும் ____________________, தலைமுக்காடுகளையும், சிரபூஷணங்களையும், பாத சரங்களையும், மார்க்கச்சைகளையும், சுகந்த பரணிகளையும் __________________, __________________, மூக்குத்திகளையும் … உரிந்துபோடுவார்.*

**குறிப்பு:** கிறிஸ்தவர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக யோவான் ஸ்நானன் எளிய உடைகளையே அணிந்திருந்தார். காண்போரை இச்சிக்கவைக்கும் இன்றைய நாகரிக உடைகள் பாவச்சோதனைக்கும் கடனுக்கும் வழிநடத்துகின்றன. அதற்காக நாம் போர்வையைச் சுற்றிக்கொண்டு நடக்கவேண்டுமென்று தேவன் விரும்பவில்லை; ஆனாலும், அளவுக்கு மிஞ்சிய விலையுள்ள, ஆடம்பரமும் பகட்டுமான உடைகளைக் கிறிஸ்தவர்கள் அணியக்கூடாது. நகை அணிவது இன்று உலகத்தில் பிரபலமாக உள்ளது; ஆனால், வேதாகமம் அதை ஆதரிக்கவில்லை. ஏசாயா 3:18–23இல் சொல்லப்பட்டுள்ள அனைத்து அணிகலன்களும் உங்களுக்குப் புரியாமல் இருக்கலாம்; ஆனால், உலகின் பிற பகுதியில் உள்ளவர்களுக்குப் புரியும். அஞ்ஞானிகளின் இந்த அணிகலன்கள் பல எல்லாக் கலாச்சாரங்களிலும் நுழைந்துவருகின்றன.

## 6. யோவானின் ஆவி நிறைந்த வாழ்க்கைக்கும் அவருடைய எளிய உணவுப் பழக்கத்திற்கும் ஏதாவது தொடர்பிருந்ததா?

**லூக்கா 1:15.** *அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், __________________ மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே __________________ __________________ நிரப்பப்பட்டிருப்பான்.*

**குறிப்பு:** கிறிஸ்தவர்கள் தெளிந்த மனதுடன் இருக்கவும், தேவ ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கவும் வேண்டுமா? போதை பானங்களைத் தவிர்க்க வேண்டும். நீதிமொழிகள் 23:31,32; ஆபகூக் 2:15; 1பேதுரு 5:8.

## 7. நாம் எதை உண்கிறோம், எதை அருந்துகிறோம் என்பதில் தேவன் ஏன் மிகுந்த அக்கறை உடையவராக இருக்கிறார்?

**நியாயாதிபதிகள் 13:7.** *அவர் என்னை நோக்கி: இதோ, நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும், __________________ ஒன்றும் புசியாமலும் இரு; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தன் மரணநாள்மட்டும் தேவனுக்கென்று நசரேயனாய் இருப்பான் என்று சொன்னார் என்றான்.*

**1கொரிந்தியர் 6:19.** *உங்கள் __________________ நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய __________________ தென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?*

**குறிப்பு:** நாம் புசிக்கிற உணவுகளும், குடிக்கிற பானங்களும் நம் மனத்தெளிவையும் பாவத் தூண்டல்களை மேற்கொள்ளும் திறனையும், 'எது சரி, எது தவறு' என்று பகுத்தறியும் திறனையும் நேரடியாகப் பாதிக்கின்றன. தான் புசிப்பது, அருந்துவது போன்று ஒரு கிறிஸ்தவன் செய்கிற ஒவ்வொன்றும் தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருவதாக இருக்கவேண்டும். 1கொரிந்தியர் 10:31.

## 8. உலகப்பிரகாரமான பழக்கவழக்கங்கள்பற்றி வேதாகமம் கூறுவது என்ன?

**யாக்கோபு 4:4.** உலகத்துக்குச் ______________________ விரும்புகிறவன் தேவனுக்குப் ______________________.

**2கொரிந்தியர் 6:17.** நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் ____________, அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**1யோவான் 2:15.** ஒருவன் __________________ அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் __________________.

**ரோமர் 12:2.** நீங்கள் இந்தப் __________________ ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் ______________________ மறுரூபமாகுங்கள்.

**குறிப்பு:** இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படும்படி பிறருக்கு உதவ விரும்புகிறவர்கள் எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழவேண்டுமென்று ஆண்டவர் தம் மக்களை அழைக்கிறார்.

## 9. கிறிஸ்தவர்கள் எப்படிப்பட்ட சிந்தையுடையவர்களாக இருக்கத் தீர்மானிக்கவேண்டும்?

**பிலிப்பியர் 4:8.** ____________________வைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, ____________________ளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, ________________ எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.

**சங்கீதம் 101:3.** தீங்கான காரியத்தை என் ________________ ________________.

**குறிப்பு:** வன்முறையான சகல செய்கைகளையும் விட்டுவிடும்படி யோவான் ஸ்நானன் சொன்னார். லூக்கா 3:14. வன்முறை நிறைந்த பொழுதுபோக்கு அம்சங்கள்கூட இன்று இதில் அடங்கும். பாலியல் வன்முறைப் பாவங்கள் முதலில் சிந்தையில் உருவாவதாக இயேசு சொன்னார். மத்தேயு 5:22,28. எனவே, அசுத்தமான எண்ணங்களைத் தூண்டும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் படங்களையும் பார்க்கக்கூடாது; அப்படிப்பட்ட புத்தகங்களை வாசிப்பதையும் ஒரு கிறிஸ்தவன் தவிர்க்கவேண்டும்.

## 10. ஓர் உண்மைக் கிறிஸ்தவர் எப்படிப்பட்ட இசையை ரசிப்பார்?

**1சாமுவேல் 16:23.** அப்படியே தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது, தாவீது ________________ எடுத்து, தன் கையினால் வாசிப்பான்; அதினாலே பொல்லாத ஆவி அவனைவிட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, ______________________.

**குறிப்பு:** இன்று உலகில் பிரபலமாக உள்ள பெரும்பாலான இசைகள் நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உதவக்கூடியவையாக இல்லை. மாறாக, அவை பரலோகக் காரியங்களை வாஞ்சிக்கும் நம் ஆசையைக் கெடுக்கின்றன; நம் இழிவான இயல்புகளை வலுப்படுத்துகின்றன. ஆனாலும், நன்மைதரும் மிகச்சிறந்த ஒன்றாக இசை இருக்கமுடியும். சவுல் ராஜா ஒரு பொல்லாத ஆவியால் சித்தரவதைக்குள்ளானபோது, தாவீதினுடைய சுரமண்டலத்தின் இன்னிசை அந்த தீய ஆவியை விரட்டி, அவருக்குப் புத்துயிர் கொடுத்தது.

## 11. நடனமாடுவது ஒரு கிறிஸ்தவருக்கு நல்ல பொழுதுபோக்காக இருக்க முடியுமா?

**1யோவான் 2:6.** அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் ________________ தானும் ________________.

**தீத்து 2:12.** நாம் அவபக்தியையும் ____________ இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் ________________ உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்(பண்ணவேண்டும்).

**குறிப்பு:** நவீன நடனங்கள் பெரும்பாலும் உலகப்பிரகாரமான இசைக்கு ஏற்றவாறும் பாலியல் உணர்வுகளைத் தூண்டும் விதத்திலும் இருக்கின்றன. 'இந்தச் சூழ்நிலையில் இயேசு என்ன செய்திருப்பார்?' என்றுதான் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் கேட்டுப்பார்க்கவேண்டும். சந்தம் விட்டு விட்டு ஒலிக்கும் இசைக்கு ஏற்றபடி, தம் பகுத்தறிவை மறந்து நம் இரட்சகர் தம் சரீரத்தையும் கைகால்களையும் சுழற்றிசுழற்றி ஆடியிருப்பாரா?

## 12. கிறிஸ்தவர்கள் லாட்டரி வாங்கலாமா, சூதாடலாமா?

**1தீமோத்தேயு 6:10.** ____________________ *எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

**2தெசலோனிக்கேயர் 3:10.** *ஒருவன்* ____________________ *மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே.*

**நீதிமொழிகள் 28:20.** ________________________ *தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்.*

**குறிப்பு:** சூதாட்டு பல போதை வஸ்துக்களுக்கு இணையானது. சூதாடவும், லாட்டரி டிக்கட் வாங்கவும் தங்கள் குடும்பச் சேமிப்பை முழுவதுமாகக் காலிபண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள். 'திடீர் பணக்காரர்களாக' ஆகும் திட்டங்களில் எல்லாம் தேவையற்ற ஆபத்துகளும், நியாயத்திற்கு முரணான விஷயங்களும், அநியாயமான இழப்புகளும் இல்லாமல் இருக்காது.

## 13. இன்றைய தேவமக்களின் நோக்கம் என்னவாக இருக்கவேண்டும்?

**1யோவான் 3:22.** *அவருடைய கற்பனைகளை நாம்* ___________________________ *அவருக்குமுன்பாகப்* ____________________________________ *செய்கி(றோம்).*

**பிரசங்கி 12:13.** *தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த* ____________________ *இதுவே.*

**குறிப்பு:** ஒருவர் தான் நினைத்தபடியெல்லாம் வாழ்ந்துவிட்டு, பரலோகம் சென்றுவிடலாம் என்று நினைக்கமுடியாது. பரிசுத்தமான வாழ்க்கைக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கவுமே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். 1பேதுரு 2:21.

## 14. இந்தப் பாடத்தில் நாம் பார்த்தபடி, தேவனுக்குக் கீழ்ப்படிவதை எப்படிப்பட்ட வாழ்க்கைமுறை எளிதாக்க முடியும்?

**யோவான் 14:15.** *நீங்கள் என்னிடத்தில்* __________________________________ *என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.*

**1யோவான் 5:3.** *நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய* ___________________________ _______________ ______________________________.

**சங்கீதம் 40:8.** *என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது* ________________________________________ *என்* _______________________ *இருக்கிறது என்று சொன்னேன்.*

## 15. கிறிஸ்தவ வாழ்க்கை ஏன் ஓர் உன்னதமான அழைப்பாக இருக்கிறது?

**1பேதுரு 2:9.** *நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை* _________________________________ _________________________________ *சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும்,* _______________________ *ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.*

**குறிப்பு:** கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாக இருப்பதால், அவர்களுடைய அழைப்பு உன்னதமானதுதான்! இயேசுவின் முதலாம் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்த யோவான் ஸ்நானன் உதவினார்; அதுபோல, இயேசுவின் இரண்டாம் வருகைக்குப் பிறரை ஆயத்தப்படுத்தும் தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்தமாக வாழும்படி தேவன் அவர்களை அழைத்திருக்கிறார்.

# நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய' விசேஷித்த சத்தமாக இருக்க ஆயத்தமாயுள்ளீர்களா? மற்றவர்களை இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்தும்படி உங்கள் நல்ல வாழ்க்கைமுறையால் சாட்சிபகர்வீர் களா?

பதில்: ____________________

# துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

## கிறிஸ்துவின் பிரதிநிதிகள்

ஒருவர் கிறிஸ்தவராகும்போது, உன்னதமான ஓர் ராஜ்யத்தின் பிரதிநிதியாக மாறுகிறார். நாம் 'கிறிஸ்து வின் ஸ்தானாபதிகள்' என்று 2கொரிந்தியர் 5:20 கூறுகிறது.

ஓர் அரசாங்கம் அல்லது ஆட்சியின் சார்பாக வேறொரு நாட்டில் தங்கி, பணியாற்ற நியமிக்கப்படும் அரசு அதிகாரியைத்தான் அரசப் பிரதிநிதி என்கிறோம்.

அரசியல் வட்டாரத்தில் அரசப் பிரதிநிதிகள் எவ்வளவு முக்கியமானவர்களோ அதுபோல்தான் ஆவிக்குரிய ராஜ்யத்தில் கிறிஸ்துவின் பிரதிநிதிகள் முக்கியமானவர்கள். பரலோக ராஜ்யத்தின் குடிமக்கள் இவ்வுலகக் குடி மக்கள்போல இருக்கமாட்டார்கள். இயேசு யார், அவர் எப்படிப்பட்டவர் என்பதை இந்த உலகத்திற்கு எடுத்துக் காட்டவே நாம் அனுப்பப்படுகிறோம். நம் நடத்தை, நம் வேலை முதலியவற்றிலிருந்து நம் உணவு, உடைவரை பரிசுத்த ஆவியானவர் மூலம் அவருடைய சாயலைப் பிரதிபலிக்க அவருடைய பிரதிநிதிகளாகிறோம். அதாவது, தேவனுடைய பரிசுத்த ராஜ்யத்தின் ஓர் அங்கமாக நாம் மாறும்போது நாம் பிரதிநிதியாகச் செயல்படும் நம் ராஜ்யத் தின் உயிருள்ள சாட்சிகளாகிறோம். 'நாமெல்லாரும் ... ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்' என்று வேதாகமம் கூறுகிறது. 2கொரிந்தியர் 3:18.

உலகில் இயேசுவின் கைகளாக, கால்களாக, கண்களாக, வாயாக, காதுகளாக நாம் இருக்கிறோம்; அதா வது நம் சபை இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் சரீரம் (எபே 1:22, 23, 5:29,30; கொலோ 1:18). இயேசு பரலோகத் திற்குச் செல்லும்வரை 'மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள்முன்பாகப் பிரகாசிக்கக்கடவது' என்றார். மத்தேயு 5:16.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com